இந்திய அரசாங்கம்

சட்டம், நீதி மற்றும் கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம்

सत्यमेव जयते

# 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்

(சட்ட எண் 22/1955)

(1979, ஜனவரி 1 ஆம் தேதிவரை திருத்தப்பட்டவாறு)

# THE PROTECTION OF CIVIL RIGHTS ACT, 1955

(Act No. 22 of 1955)

(As amended upto 1st January, 1979)

தமிழாக்கம் :

இந்திய அரசாங்கத்திற்காக

சட்ட (ஆட்சிமொழிப் பிரிவு)த் துறை

சென்னை—9

தமிழ்நாடு அரசாங்க எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
2003.

# 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்

**(சட்ட எண் 22/1955)**

# THE PROTECTION OF CIVIL RIGHTS ACT, 1955

**(Act No. 22 of 1955)**

330 12—1*

# PREFACE

This edition of the Protection of Civil Rights Act, 1955 (Act No. 22 of 1955) as amended up to 1st January, 1979, contains the authorised translation of the Act in Tamil and the same was published in the *Gazette of India*, Extraordinary, Part XV, Section I, No.1, Vol. I, dated 25th July 1981, on pages 9 to 23.

The authorised translation in Tamil was published under the authority of the President under clause (a) of Section 2 of the Authorised Translation (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authorised translation of the Act in Tamil.

New Delhi,
25th July 1981.

(Signed)............................,
*Secretary to Government of India.*

## முன்னுரை

*1979 ஜனவரி 1 ஆம் தேதிவரை திருத்தப்பட்டவாறுள்ள* **1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்** *(சட்ட எண் 22/1955)* இந்தப் பதிப்பு, அச்சட்டத்தின் அதிகாரபூர்வமான தமிழ் மொழிப்பெயர்ப்பைக் கொண்டுள்ளது. இது 1981 ஜூலை 25 ஆம் தேதியிட்ட **இந்திய அரசிதழின் சிறப்பிதழ்,** பகுதி XV, பிரிவு I, எண் 1, I ஆம் தொகுதியில் 9 முதல் 23 வரையிலுள்ள பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரபூர்வமான தமிழ் மொழிபெயர்ப்பு, 1973 ஆம் ஆண்டு அதிகாரபூர்வமான மொழிபெயர்ப்புகள் (மத்தியச் சட்டங்கள்) சட்டத்தின் (50/1973) 2 ஆவது பிரிவின் (அ) கூறின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது. அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரபூர்வமான மொழிபெயர்ப்பு ஆயிற்று.

புதுதில்லி,<br>
25 ஜூலை 1981.

(ஒப்பம்) . . . . . . . . . . .<br>
இந்திய அரசாங்கத்தின் செயலர்.

# [THE] PROTECTION OF CIVIL RIGHTS ACT, 1955

## (ACT No. 22 OF 1955)

CONTENTS


| Sections: | | Page |
|---|---|---|
| 1. | Short title, extent and commencement. | 1 |
| 2. | Definitions. | 1 |
| 3. | Punishment for enforcing religious disabilities. | 3 |
| 4. | Punishment for enforcing social disabilities. | 3 |
| 5. | Punishment for Refusing to admit persons to hospital, etc. | 5 |
| 6. | Punishment for refusing to sell goods or render services. | 5 |
| 7. | Punishment for other offences arising out of "Untouchability". | 5 |
| 7.A. | Unlawful Compulsory labour when to be deemed to be a Practice of untouchability | 7 |
| 8. | Cancellation or suspension of licences in certain cases. | 8 |
| 9. | Resumption or suspension of grants made by Government. | 8 |
| 10. | Abetment of offence. | 8 |
| 10.A. | Power of State Government to impose Collective fine | 8 |
| 11. | Enhanced penalty on subsequent conviction. | 10 |
| 12. | Presumption by Courts in certain cases. | 10 |
| 13. | Limitation of jurisdiction of Civil Courts. | 10 |
| 14. | Offences by companies. | 11 |
| 14.A. | Protection of action taken in good faith. | 11 |
| 15. | Offences to be congnizable and triable summarily. | 11 |
| 15.A. | Duty of State Government to ensure that the rights accruing from the abolition of "Untouchability" may be availed of by the Concerned Persons. | 12 |
| 16. | Act to override other laws. | 13 |
| 16.A. | Probation of offenders Act, 1958, not to apply to Persons above the age of 14 years. | 13 |
| 16.B. | Power to make rules. | 13 |
| 17. | Repeal. | 13 |
| | The Schedule. | 14 |

**1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்**
**(சட்ட எண் 22/1955)**

**பொருளடக்கம்.**


| பிரிவுகள்: | | பக்கம் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பும் அளாவுகையும் தொடக்கமும். | 1 |
| 2. | இலக்கணங்கள். | 1 |
| 3. | சமய சம்பந்தமான முட்டுப்பாடுகளை வற்புறுத்துவதற்கான தண்டனை. | 3 |
| 4. | சமூக முட்டுப்பாடுகளை வற்புறுத்துவதற்குத் தண்டனை. | 3 |
| 5. | மருத்துவமனைகள் முதலியவற்றில் ஆட்களை அனுமதிக்க மறுப்பதற்குத் தண்டனை. | 5 |
| 6. | சாக்குகளை விற்பனை செய்ய அல்லது பணிகள் செய்ய மறுப்பதற்குத் தண்டனை | 5 |
| 7. | தீண்டாமையினின்று எழுகின்ற மற்ற குற்றங்களுக்குத் தண்டனை. | 5 |
| 7.அ. | சட்டவிரோதமான கட்டாய உழைப்பானது தீண்டாமையைப் பயிலும் ஒன்றாக எப்போது கொள்ளப்படுதல் வேண்டும். | 7 |
| 8. | குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் உரிமங்களை ரத்து செய்தல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல். | 8 |
| 9. | அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட மானியங்களை மீட்டல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல். | 8 |
| 10. | குற்றத்திற்கு உடந்தையாயிருத்தல். | 8 |
| 10.அ. | கூட்டு அபராதம் விதிப்பதற்கு மாநில அரசாங்கத்துக்குள்ள அதிகாரம். | 8 |
| 11. | பிந்திய தண்டனைத் தீர்ப்பின் பேரில் அதிகரிக்கப்பட்ட தண்டனை. | 10 |
| 12. | ஒரு சில வழக்குகளின் நீதிமன்றங்கள் செய்யவேண்டிய அனுமானம். | 10 |
| 13. | உரிமை வழக்கு நீதிமன்றங்களுடைய அதிகாரவரம்பின் வரையறை. | 10 |
| 14. | கம்பெனிகளால் செய்யப்படும் குற்றங்கள். | 11 |
| 14.அ. | நல்லெண்ணத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பாதுகாப்பு. | 11 |
| 15. | குற்றங்கள் கைது செய்தற்குரியனவாகவும் சுருக்கு முறையில் விசாரிக்கத்தக்கனவாகவும் இருத்தல். | 11 |
| 15.அ. | தீண்டாமை ஒழிப்பினால் வந்தடைகிற உரிமைகள், சம்பந்தப்பட்ட ஆட்களால் பயன்படுத்திக் கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்கு மாநில அரசாங்கத்திற்குள்ள கடமை. | 12 |
| 16. | செய்சட்டம் மற்றச் சட்டங்களை மீதூர்ந்து இயங்கும். | 13 |
| 16.அ. | 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் கண்காணிப்புச் சட்டம் 14 வயதுக்கு மேற்பட்ட ஆட்களின் மீது இயங்குதல் ஆகாது. | 13 |
| 16.ஆ. | விதிகள் செய்வதற்கு அதிகாரம். | 13 |
| 17. | நீக்கம். | 13 |
| | அட்டவணை | 14 |

# THE PROTECTION OF CIVIL RIGHTS ACT, 1955.

## 22 OF 1955[1]

(As modified upto the 1st December 1976.)

[8th May 1955.]

An Act to prescribe punishment for the [2][preaching and practice of "Untouchability"], for the enforcement of any disability arising therefrom and for matters connected therewith.

Be it enacted by parliament in the Sixth year of the Republic of India as follows:—

Short title, extent and commencement.

**1.** *(1)* This Act May be called [3][the protection of Civil Rights Act], 1955.

*(2)* It extends to the whole of India.

*(3)* It shall come into force on such date[4] as the central Government may, by notification in the Official Gazette, appoint.

Definitions.

**2.** In this Act, unless the context otherwise requires,—

[5][*(a)* "civil rights" means any right accruing to a person by reason of the abolition of "untouchability" by article 17 of the constitution;]

[6]*[(aa)* "hotel" includes a refereshment room, a boarding house, a lodging house, a coffee house and a cafe;

[7][*(b)* "place" includes a house, building and other structure and premises; and also includes a tent, vehicle and vessel;]

*(c)* "place of public entertainment" includes any place to which the public are admitted and in which an entertainment is provided or held.

---

1 Extended to Gao, Damon and Diu with modification by Regulation 12 of 1962, section 3 and Schedule to dadra and Nagas Haveli by Regulation 6 of 1963, section 2 and Schedule I (with effect from 1st July 1965) and to Pondicherry by Regulation 7 of 1963, section 3 and Schedule I (with effect from 1st October 1963).

2 Subs. by Act 106 of 1976, s. 2, for "practice of 'Untouchability" (w.e.f.19-11-1976).

3 Subs. by s. 3, *ibid.*, for "the Untouchability (Offences) Act" (wl.e.f. 19-11-1976).

4 1st June, 1955, *vide* Notification No. S.R.O., 1109, dated the 23rd May 1955, *Gazette of India*, 1955, Extraordinary, part II. Section 3, page 1971.

5 Ins. by Act 106 of 1976, s. 4 (w.e.f. 19-11-1976).

6 Clause *(a)* was relettered as clause *(aa)* by s. 4, *ibid.*, (w.e.f. 19-11-1976).

7 Subs. by s. 4 *ibid.*, for cl.*(b)* (w.e.f.19-11-1976).

# 1955-ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்
## (சட்ட எண் 22/1955)[1]

[1955 மே 8]

[2]["தீண்டாமை" யைப் போதிப்பது, பயிலுவது] அதிலிருந்து எழுகின்ற முட்டுப்பாடு எதையும் வற்புறுத்துவது ஆகியவற்றுக்குத் தண்டனை விதிப்பதற்காகவும் அதனுடன் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்காகவுமான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் ஆறாவது ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றபடுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம் 1955 ஆம ஆண்டு [3][குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்] என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் அளாவுகையும் தொடக்கமும்.

(2) இது, இந்தியா முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது, மத்திய அரசாங்கம் அதிகாரபூர்வமான அரசிதழில் அறிவிக்கை வாயிலாக நிர்ணயிக்கலாகும் தேதியன்று [4]அமலுக்கு வருதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தில், சூழ்நிலை வேறுபொருள் குறித்தாலன்றி,— இலக்கணங்கள்.

[5][(அ) "குடியியல் உரிமைகள்" என்பது, அரசமைப்பின் 17 ஆவது உறுப்பினால் "தீண்டாமை" ஒழிக்கப்பட்டதன் காரணமாக ஆள் ஒருவரை வந்தடையும் உரிமை எதுவும் என்று பொருள்படும்.]

[6][(அ அ) "உணவகம்" என்பது, சிற்றுண்டிச்சாலை, உணவு விடுதி, தங்கும் விடுதி, காப்பிக்கடை மற்றும் கஃபே (Cafe) ஒன்றையும் உள்ளடக்கும்.]

[7][(ஆ) "இடம்" என்பது, வீட்டையும், கட்டடத்தையும், பிற கட்டுமானத்தையும், வளாகத்தையும் உள்ளடக்கும்; மேலும் அது கூடாரம், வாகனம், கலம் ஆகியவற்றையும் கூட உள்ளடக்கும்.]

(இ) "பொதுக்கேளிக்கை இடம்" என்பது, பொதுமக்கள் உட் செல்ல அனுமதிக்கப்பட்டு, கேளிக்கைக்கு அதில் வகை செய்யப்பட்டிருக்கிறதும் அல்லது கேளிக்கை நடத்தப் படுகிறதுமான இடம் எதையும் உள்ளடக்கும்.

---

1. 1962 ஆம் ஆண்டு 12 ஆவது ஒழுங்குமுறைச் சட்டத்தின் 3 வது பிரிவினாலும் 1 வது இணைப்புப்பட்டியலாலும் மாறுதலுடன் கோவா-டாமன்-டையுவிற்கும், 1965 ஆம் ஆண்டு 6 வது ஒழுங்குமுறைச் சட்டத்தின் 2 வது பிரிவினாலும் 1 வது இணைப்புப் பட்டியலாலும் (1965 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் அமலுக்கு வருமாறு தாத்ரா மற்றும் நாகர் ஹவேலிக்கும், 1965 ஆம் ஆண்டு 7வது ஒழுங்குமுறைச் சட்டத்தின் 3ஆவது பிரிவினாலும் 1 ஆவது இணைப்புப்பட்டியலாலும் (1963 ஆண்டு அக்டோபர் 1 முதல் அமலுக்கு வருமாறு) பாண்டிச்சேரிக்கும் நீட்டிக்கப்பட்டது.
2. "தீண்டாமையைப் பயிலுவதற்கு" என்பதற்குப் பதிலாக 1976 ஆம் ஆண்டு 106 ஆவது சட்டத்தின் 2 ஆவது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) அமைக்கப்பட்டது.
3. "தீண்டாமை (குற்றங்கள்) சட்டம்" என்பதற்குப் பதிலாக (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) அதே சட்டத்தின் 3 ஆவது பிரிவினால் அமைக்கப்பட்டது.
4. 1955 ஆம் ஆண்டு ஜூன் 1955 ஆம் ஆண்டு மே 23 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எஸ்.ஆர்.ஓ. (S.R.O.) 1109, 1955 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தின் சிறப்பு அரசிதழ் பகுதி II, 3 ஆவது பிரிவு, பக்கம் 1971 ஐப் பார்க்கவும்.
5. 1976 ஆம் ஆண்டு 106 ஆவது சட்டத்தின் 4 ஆவது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.
6. அதே சட்டத்தின் 4 ஆவது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) (அ) கூறு என்பது (அ ஆ) கூறு என்று மறு எழுத்திடப்பட்டது.
7. அதே சட்டத்தின் 4 ஆவது பிரிவினால் (ஆ) கூறுக்குப் பதிலாக (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) அமைக்கப்பட்டது.

**Explanation.**—"Entertainment" includes any exhibition, performance, game, sport and any other form of amusement;

*(d)* "place of public worship" means a place, by whatever name known, which is used as a place of public religious worship or which is dedicated generally to, or is used generally by, persons professing any religion or belonging to any religious denomination or any section thereof, for the performance of any religious service, or for offering prayers therein; [8][and includes—

*(i)* all lands and subsidiary shrines appurtenant or attached to any such place,

*(ii)* a privately owned place of worship which is, in fact, allowed by the owner thereof to be used as a place of public worship, and

*(iii)* such land or subsidiary shrine appurtenant to such privately owned place of worship as is allowed by the owner thereof to be used as a place of public religious worship;]

[5][*(da)* "prescribed" means prescribed by rules made under this act;

*(db)* "Scheduled Castes" has the meaning assigned to it in clause *(24)* of article 366 of the Constitution;]

*(e)* "shop" means any premises where goods are sold either wholesale or by retail or both wholesale and by retail [1][and includes—

*(i)* any place from where goods are sold by a hawker or vendor or from a mobile van or cart,

*(ii)* a laundry and a hair cutting saloon;

*(iii)* any other place where services are rendered to customers.]

---

[8] Subs. by s,4,ibid; for certain words (w.e.f 19-11-1976)

[5] Ins. by Act 106 of 1976, S.4 (w.e.f. 19-11-1976).

[1] Subs. by Act, 106 of 1976, s. 4 for certain words (w.e.f. 19-11-1976).

விளக்கம்.—"கேளிக்கை" என்பது, கண்காட்சி, கலைநிகழ்ச்சி, விளையாட்டு, விளையாட்டுப் போட்டி மற்றும் வேறு வகையான பொழுது போக்கு எதையும் உள்ளடக்கும்.

(ஈ) "பொது வழிபாட்டிடம்" என்பது, எந்தப் பெயரால் வழங்கப்பட்டாலும் சரி, பொதுச்சமய வழிபாட்டிடமாகப் பயன்படுத்தப்படுகிற அல்லது சமயப்பணி எதையும் புரிவதற்கென அல்லது அதில் பிரார்த்தனை செய்வதற்கென சமயம் எதையும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்கிற ஆட்களுக்கு அல்லது சமயப்பிரிவு எதையும் அல்லது அதன் பகுதி எதையும் சேர்ந்த ஆட்களுக்கு, பொதுவாக அர்ப்பணிக்கப்பட்டிருக்கிற அல்லது அவர்களால் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிற ஓர் இடம் என்று பொருள்படும்:

[1][மேலும்—

(i) அத்தகைய இடம் எதனுடன் சேர்ந்ததாயுள்ள அல்லது இணைந்துள்ள எல்லா நிலங்களையும் துணைக்கோயில்களையும்,

(ii) தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமாயிருந்து, உள்ளபடியே பொது வழிபாட்டிடமாகப் பயன்படுத்தப்படுவதற்கு அதன் சொந்தக்காரரால் அனுமதிக்கப்பட்டுள்ள வழிபாட்டிடத்தையும்,

(iii) தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமாயிருந்து, பொதுச்சமய வழிபாட்டிடமாகப் பயன்படுத்தப்படுவதற்கு அதன் சொந்தக்காரரால் அனுமதிக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய வழிபாட்டிடத்துடன் சேர்ந்ததாயுள்ள நிலத்தையும் அல்லது துணைக்கோயிலையும் உள்ளடக்கும்.]

[2][(ஈஅ) "விதிக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் விதிக்கப்பட்ட என்று பொருள்படும்.

(ஈஆ) "பட்டியல் சாதியினர்" என்பது, அரசமைப்பின் 366 ஆவது உறுப்பின் (24) ஆவது கூறில் அதற்கு அளிக்கப்பட்டுள்ள பொருளைக் கொண்டுள்ளது.]

(உ) "கடை" என்பது, மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ அல்லது மொத்தமாகவும் சில்லறையாகவுமோ பொருள்கள் விற்கப்படுகிற இடம் எதுவும் என்று பொருள்படும்; [1][மேலும்—

(i) தெரு வணிகராலோ, விற்பனையாளராலோ அல்லது நடமாடும் பெட்டி வண்டி (van) அல்லது வண்டியில் வைத்தோ சரக்குகள் விற்பனை செய்யப்படும் எந்த இடத்தையும்,

(ii) சலவைச் சாலையும், முடிவெட்டும் நிலையத்தையும்,

(iii) வாடிக்கைகாரர்களுக்குப் பணிகள் செய்யப்படும்

வேறு இடம் எதையும் உள்ளடக்கும்.]

---

1. 1976 ஆம் ஆண்டு 106 ஆவது சட்டத்தின் 4 ஆவது பிரிவினால் சில சொற்களுக்குப் பதிலாக (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) அமைக்கப்பட்டது.

2. அதே சட்டத்தின் 4 ஆவது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.

Punishment for enforcing religious disabilities.

**3.** Whoever on the ground of "untouchability" prevents any person—

*(a)* from entering any place of public worship which is open to other persons professing the same religion [2]*** or any section thereof, as such person; or

*(b)* from worshipping or offering prayers or performing any religious service in any place of public worship, or bathing in, or using the waters of, any sacred tank, well, spring or water-course [3][river or lake or bathing at any ghat of such tank, water-course, river or lake] in the same manner and to the same extent as is permissible to other persons professing the same religion [2]***or any section thereof, as such person;

[5][shall be punishable with imprisonment for a term of not less than one month and not m ore than six months and also with fine which shall be not less than one hundred rupees and not more than five hundred rupees].

*Explanation.*—For the purposes of this section and section 4 persons professing the Buddhist, Sikh or Jaina religion or persons professing the Hindu religion in any of its forms or developments including Virashaivas, Lingayats, Adivasis, followers of Brahmo, Prarthana, Arya Samaj and the Swaminarayan Sampraday shall be deemed to be Hindus.

Punishment for enforcing social disabilities.

**4.** Whoever on the ground of "untouchability" enforces against any person disability with regard to—

*(i)* access to any shop, public restaurant, hotel or place of public entertainment; or

*(ii)* the use of any utensils, and other articles kept in any public restaurant, hotel, *dharmshala, sarai or musafirkhana* for the use of the general public or of [5][any section thereof]; or

---

2 the words "or belonging to the same religious denomination" omitted by s. 5, ibid, (w.e.f. 19-11-1976).

3 Ins by s. 5, *ibid.*, (w.e.f. 19-11-1976).

4 Subs by s. 5, *ibid* , for certain words (w.e.f. 19-11-1976).

5 Subs. by s. 6, *ibid.*, for certain works (w.e.f. 19-11-1976).

3. "தீண்டாமை" காரணமாக எந்த ஆளையும்— சமய சம்பந்தமான முட்டுப் பாடுகளை வற்புறுத்துவதற் கான தண்டனை.

(அ) அத்தகையவர் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ள அதே சமயத்தை [1]*** அல்லது அதன் பிரிவு எதனையும் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ள வேறு ஆட்கள் செல்லுவதற்கு உரிமை கொண்டுள்ள பொது வழிபாட்டிடம் எதிலும் நுழைவதை, அல்லது

(ஆ) அத்தகையவர் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ள அதே சமயத்தை [1]*** அல்லது அதன் பிரிவு எதனையும் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ள வேறு ஆட்கள் செல்லுவதற்கு உரிமை கொண்டுள்ள பொது வழிபாட்டிடம் எதிலும் அனுமதிக்கப்படுகிற அதே முறையிலும் அதே அளவுக்கும், பொது வழிபாட்டிடம் எதிலும் வழிபாடு செய்வதை அல்லது பிரார்த்தனை செய்வதை அல்லது சமயப்பணி எதுவும் புரிவதை அல்லது புனிதமான குளம், கிணறு, நீருற்று அல்லது நீரோடை, [2][ஆறு அல்லது ஏரியில் குளிப்பதை] அல்லது அதன் நீரைப் பயன்படுத்துவதை [2][அல்லது அத்தகைய குளம், நீரோடை, ஆறு அல்லது ஏரியின் படித்துறை எதிலும் குளிப்பதை]

தடுக்கிறவர் எவராயினும், [3][ஒரு மாதத்திற்குக் குறையாததும் ஆறு மாதத்திற்கு மேற்படாததுமான ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனையும் அதோடுகூட நூறு ரூபாய்க்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாததுமான அபராதமும் விதித்துத் தண்டிக்கபடத்தக்கவராவர்.]

விளக்கம்— இந்தப் பிரிவு, 4 ஆவது பிரிவு ஆகியவற்றின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில், பௌத்த, சீக்கிய அல்லது சமண சமயத்தை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ள ஆட்களும், அல்லது வீரசைவர்கள், லிங்காயத்துகள், ஆதிவாசிகள், மற்றும் பிரமோசமாஜம், பிரார்த்தனா சமாஜம், ஆரியசமாஜம், சுவாமிநாராயணர் சம்பிரதாயம் ஆகியவற்றைப் பின்பற்றுபவர்கள் உள்ளடங்காலாக இந்து சமயத்தின் வடிவங்களில் அல்லது பெருக்கங்களில் எவற்றையும் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ள ஆட்களும், இந்துக்கள் என்று கொள்ளப்படுதல் வேண்டும்.

4. "தீண்டாமை" காரணமாக— சமூக முட்டுப் பாடுகளை வற்புறுத்து வதற்குத் தண்டனை.

(i) கடை, பொதுஉணவுச்சாலை, உணவகம் அல்லது பொதுக் கேளிக்கைக்கான இடம் எதற்கும் போய்வருவது சம்பந்தமாக, அல்லது

(ii) பொது உணவுச்சாலை, உணவகம், தருமச்சாலை, சராய் அல்லது முஸாபிர்கானா எதிலும் பொதுப்படையான பொதுமக்கள் அல்லது [4][அந்தப் பொதுமக்களுடைய பிரிவு எதுவும்] பயன்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருக்கிற ஏனங்கள் மற்றும் உருப்படிகள் எவற்றையும் பயன்படுத்துவது சம்பந்தமாக, அல்லது

---

1. "அல்லது அதே சமயப் பிரிவைச் சேர்ந்த" என்ற சொற்கள் 1976 ஆம் ஆண்டு 106 ஆவது சட்டத்தின் 5 ஆவது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) விட்டுவிடப்பட்டன.

2. அதே சட்டத்தின் 5 ஆவது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப் பட்டது.

3. அதே சட்டத்தின் 6 ஆவது பிரிவினால் சில சொற்களுக்குப் பதிலாக (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) அமைக்கப்பட்டது.

4. அதே சட்டத்தின் 6 ஆவது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) சில சொற்களுக்குப் பதிலாக அமைக்கப்பட்டது.

(iii) the practice of any profession or the carrying on of any occupation, trade or business [6][or employment in any job]; or

(iv) the use of, or access to, any river, stream, spring, well, tank, cistern, water-tap or other watering place, or any bathing ghat, burial or cremation ground, any sanitary convenience, any road, or passage, or any other place of public resort which other members of the public, or [5][any section thereof], have a right to use or have access to; or

(v) the use of, or access to, any place used for a charitable or a public purpose maintained wholly or partly out of State funds or dedicated to the use of the general public or [5][any section thereof]; or

(vi) the enjoyment of any benefit under a charitable trust created for the benefit of the general public or of [5][any section thereof]; or

(vii) the use of, or access to, any public conveyance; or

(viii) the construction, acquisition, or occupation of any residential premises in any locality, whatsoever; or

(ix) the use of any *dharmshala, sarai or musfirkhana* which is open to the general public, or to [1][any section thereof]; or

(x) the observance of any social or religious custom, usage or ceremony or [2][taking part in, or taking out, any religious, social or cultural procession]; or

(xi) the use of jewellery and finery;

[1][shall be punishable with imprisonment for a term of not less than one month and not more than six months and also with fine which shall be not less than one hundred rupees and not more than five hundred rupees].

---

1 Subs by Act 106 of 1976, s. 4 for certain words (w.e.f 19-11-1976)
2 subs. by s.6. ibid; for "taking part in any religions procession" (w.e.f. 19-11-1976)
5 Ins. by s.6 ibid., (w.e.f.19-11-1976)
6 Ins. by s.6 ibid., (w.e.f.19-11-1976)

(iii) தொழில் எதையும் பயிலுவது அல்லது வாழ்க்கைத் தொழில் வர்த்தகம் அல்லது வியாபாரம் எதையும் நடத்துவது [1][அல்லது வேலை எதிலும் அமர்த்துவது சம்பந்தமாக] அல்லது

(iv) பொதுமக்களில் பிறரோ [அந்தப் பொதுமக்களின் பிரிவு எதையும்] சேர்ந்த பிறரோ பயன்படுத்துவதற்கு அல்லது போய் வருவதற்கு உரிமை கொண்டுள்ள ஆறு, ஓடை, நீரூற்று, கிணறு, குளம், நீர்த்தொட்டி, தண்ணீர்க்குழாய் அல்லது வேறு நீர் வழங்கும் இடம் எதையும் அல்லது நீராடுதுறை, இடுகாடு அல்லது சுடுகாடு எதையும், சுகாதார முறையிலான கழிவிடம் எதையும், சாலை அல்லது வழி எதையும் அல்லது பொதுமக்கள் கூடும் வேறு இடம் எதையும் பயன்படுத்துவது அல்லது அங்கு போய்வருவது சம்பந்தமாக, அல்லது

(v) அரசின் நிதியங்களிலிருந்து முழுவதாகவோ பகுதியாகவோ பராமரிக்கப்பட்டு வருகிற அல்லது பொதுப்படையான பொதுமக்கள் அல்லது [2][அந்தப் பொதுமக்களுடைய பிரிவு எதுவும்] பயன்படுத்தப்படுவதற்காக அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிற அற அல்லது பொது நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகிற இடம் எதையும் பயன்படுத்துவது அல்லது அங்கு போய்வருவது சம்பந்தமாக, அல்லது

(vi) பொதுப்படையான பொதுமக்களின் அல்லது [2][அந்தப் பொது மக்களுடைய பிரிவு ஏதொன்றின்] நன்மைக்காகவும் ஏற்படுத்தப்பட்ட ஓர் அறக்கட்டளையின்படி நன்மை எதனையும் அனுபவிப்பது சம்பந்தமாக, அல்லது

(vii) பொது வாகனம் எதையும் பயன்படுத்துவது அல்லது அதில் போய்வருவது சம்பந்தமாக, அல்லது

(viii) எந்த வட்டாரத்திலேயாயினும் குடியிருப்பு வளாகங்கள் எவற்றையும் கட்டுவது, ஈட்டுவது அல்லது அவற்றை அனுபோகம் செய்வது சம்பந்தமாக, அல்லது

(ix) பொதுப்படையான பொதுமக்களுக்கு அல்லது [2][அந்தப் பொதுமக்களுடைய பிரிவு எதற்கும்] திறந்துவைக்கப்பட்டிருக்கிற தருமசாலை, சராய் அல்லது முஸாபிபிர்கானா எதையும் பயன்படுத்துவது சம்பந்தமாக, அல்லது

(x) சமூக அல்லது சமய வழக்கம், வழக்காறு அல்லது சடங்கு எதையும் அனுசரிப்பது சம்பந்தமாக அல்லது [3][சமய, சமூக அல்லது பண்பாட்டு ஊர்வலம் எதிலும் பங்கு கொள்வது அல்லது அதை நடத்துவது] சம்பந்தமாக, அல்லது

(xi) நகைகளையும் ஆடை அலங்காரங்களையும் பயன்படுத்துவது சம்பந்தமாக

ஆள் எவருக்கும் விரோதமாக முட்டுப்பாட்டை வற்புறுத்துகிற எவராயினும், [2][ஒரு மாதத்திற்குக் குறையாததும் ஆறு மாதத்திற்கு மேற்படாததுமான ஒரு கால அளவுக்குச் சிறைதண்டனையும், அதோடுகூட நூறு ரூபாய்க்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாததுமான அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.]

---

1. 1976 ஆம் ஆண்டு 106 ஆவது சட்டத்தின் 6 ஆவது பிரிவினால் (19—11—1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.

2. அதே சட்டத்தின் 6 ஆவது பிரிவினால் (19—11—1976 முதல் அமலுக்கு வருமாறு சில சொற்களுக்குப் பதிலாக அமைக்கப்பட்டது.

3. அதே சட்டத்தின் 6 ஆவது பிரிவினால் "சமய ஊர்வலம் எதிலும் பங்கு கொள்ளுதல்" என்பதற்குப் பதிலாக (19—11—1976 முதல் அமலுக்கு வருமாறு) அமைக்கப்பட்டது.

[2][*Explanation.*-For the purpose of this section, "Enforcement of any disability" includes any discrimination on the ground of 'untouchability".]

Punishment for refusing to admit persons to hospitals, etc.

**5.** whoever on the ground of "untouchability"—

*(a)* refuses admission to any person to any hospital, dispensary, educational institution or any hostel [4] * * * if such hospital, dispensary, educational institution or hostel is established or maintained for the benefit of the general public or any section thereof; or

*(b)* does any act which discriminates against any such person after admission to any of the aforesaid institutions;

[5][shall be punishable with imprisonment for a term of not less than one month and not more than six months and also with fine which shall be not less than one hundred rupees and not more than five hundred rupees]

Punishment for refusing to sell goods or render services.

**6.** Whoever on the ground of "untouchability" refuses to sell any goods or refuses to render any service to any person at the same time and place and on the same terms and conditions at or on which such goods are sold or services are rendered to other persons in the ordinary course of business [6][shall be punishable with imprisonment for a term of not less than one month and not more than six months and also with fine which shall be not less than one hundred rupees and not more than five hundred rupees.]

Punishment for other offences arising out of "untouchability"

**7.** (l) Whoever—

*(a)* prevents any person from exercising any right accruing to him by reason of the abolition of "untouchability" under article 17 of the Constitution; or

*(b)* molests, injures, annoys, obstructs or causes or[6] attempts to cause obstruction to any person in the exercise of any such right or molests, injures, annoys or boycotts any person by reason of his having exercised any such right; or

*(c)* by words, either spoken or written, or by signs or by visible representations or otherwise, incites or encourages any person or class of persons or the public generally to practice "untouchability" in any form whatsoever;[7][or]

---

4 The words "attached thereto" omitted by s.7 *ibid.*, (w.e.f.19-11-1976)

5 Subs. by s.7, *ibid* for certain words (w.e.f.19-11-1976).

6 Subs by s 8 *ibid.*, for certain words (w.e.f.19-11-1976).

7 Ins. by s9 *ibid.*, (w.e.f.19-11-1976).

[1][விளக்கம்.—இந்தப் பிரிவின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில், "முட்டுப்பாடு எதனையும் வற்புறுத்தல்" என்பது, "தீண்டாமை" காரணமாக வேற்றுமை பாராட்டுதல் எதையும் உள்ளடக்கும்]

**5.** "தீண்டாமை" காரணமாக— மருத்துவமனைகள் முதலியவற்றில் ஆட்களை அனுமதிக்க மறுப்பதற்குத் தண்டனை.

(அ) மருத்துவமனை, மருந்தகம், கல்வி நிறுவனம் எதிலும் அல்லது 2***விடுதி எதிலும்-அத்தகைய மருத்துவமனை, மருந்தகம், கல்வி நிறுவனம் அல்லது விடுதி பொதுப்படையான பொது மக்களின் அல்லது அப்பொதுமக்களுடைய பிரிவு ஏதொன்றின் நன்மைக்காகவும் நிறுவப்பட்டிருந்தால் அல்லது பராமரிக்கப்பட்டு வந்தால்—எந்த ஆளையும் அனுமதிக்க மறுக்கிற, அல்லது

(ஆ) மேற்சொல்லப்பட்ட நிறுவனங்களில் எதிலும் அனுமதிக்கப்பட்ட பின்பு அத்தகைய ஆள் எவருக்கும் விரோதமாக வேற்றுமை பாராட்டும் செய்கை எதையும் செய்கிற எவராயினும், [3][ஒரு மாதத்திற்குக் குறையாததும் ஆறு மாதங்களுக்கு மேற்படாததுமான ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனையும், அதோடு கூட நூறு ரூபாய்க்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாததுமான அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.]

**6.** "தீண்டாமை" காரணமாக, ஆள் எவருக்கும், நடவடிக்கைகளின் சாதாரணப் போக்கில் மற்ற ஆட்களுக்குச் சரக்குகள் விற்கிற அல்லது பணிகள் செய்கிற அதே ஷரத்துகள் மற்றும் நிபந்தனைகள் பேரில் அதே சமயத்திலும் இடத்திலும் சரக்குகள் எவற்றையும் விற்க அல்லது பணி எதையும் செய்ய மறுக்கிற எவராயினும், [4][ஒரு மாதத்திற்குக் குறையாததும், ஆறு மாதங்களுக்கு மேற்படாததுமான ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையும் அதோடு கூட நூறு ரூபாய்க்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாததுமான அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.] சரக்குகளை விற்பனை செய்ய அல்லது பணிகள் செய்ய மறுப்பதற்குத் தண்டனை.

**7.** (1) (அ) எந்த ஆளையும், அவருக்கு அரசமைப்பின் 17ஆவது உறுப்பின்படி, "தீண்டாமை" ஒழிக்கப்பட்ட காரணத்தால் வந்தடைகிற உரிமை எதையும் செலுத்தவொட்டாமல் தடுக்கிற, அல்லது தீண்டாமையினின்று எழுகின்ற மற்ற குற்றங்களுக்குத் தண்டனை.

(ஆ) எந்த ஆளுக்கும் அத்தகைய உரிமை எதையும் செலுத்துங்கால் தொந்தரவு கொடுக்கிற, கேடுறுத்துகிற, தொல்லை தருகிற, தடங்கல்செய்கிற அல்லது தடங்கல் செய்விக்கிற அல்லது தடங்கல் செய்விக்க முயலுகிற அல்லது எந்த ஆளையும் அவர் அத்தகைய உரிமை எதையும் செலுத்தியிருக்கிற காரணத்தால் தொந்தரவு செய்கிற, கேடுறுத்துகிற, தொல்லை தருகிற அல்லது விலக்கி வைக்கிற, அல்லது

(இ) பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட சொற்களால் அல்லது சைகைகளால் அல்லது கண்ணுக்குப் புலனாகும் உருவப் படைப்புகளால் அல்லது வேறு வகையால் ஆள் எவரையும் அல்லது ஆட்களின் வகையினர் எவரையும் அல்லது பொதுப்படையாகப் பொது மக்களை "தீண்டாமை"யை எந்த வடிவத்திலேயாயினும் பயிலுமாறு தூண்டுகிற அல்லது ஊக்குவிக்கிற, [1][அல்லது]

---

1. 1976ஆம் ஆண்டு 106 ஆவது சட்டத்தின் 6ஆவது பிரிவினால் (19—11—1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.

2. அதே சட்டத்தின் 7 ஆவது பிரிவினால் "அத்துடன் இணைந்த" என்ற சொற்கள் (19—11—1976 முதல் அமலுக்கு வருமாறு) விட்டுவிடப்பட்டன.

3. அதே சட்டத்தின் 7 ஆவது பிரிவினால் சில சொற்களுக்குப் பதிலாக (19—11—1976 முதல் அமலுக்கு வருமாறு) அமைக்கப்பட்டது.

4. அதே சட்டத்தின் 8 ஆவது பிரிவினால் (19—11—1976 முதல் அமலுக்கு வருமாறு) சில சொற்களுக்குப் பதிலாக அமைக்கப்பட்டது.

[7][(d) insults of attempts to insult, on the ground of "untouchability" a member of a Scheduled Caste].

[4][shall be punishable with imprisonment for a term of not less than one month and not more than six months, and also with fine which shall be not less than one hundred rupees and not more than five hundred rupees].

[2][*Explanation I*]—A person shall be deemed to boycott another person who—

*(a)* refuses to let to such other person or refuses to permit such other person, to use or occupy any house or land or refuses to deal with, work for hire for, or do business with, such other person or to render to him or receive from him any customary service, or refuses to do any of the said things on the terms on which such things would be commonly done in the ordinary course of business; or

*(b)* abstains from such social, professional or business relations as he would ordinarily maintain with such other person.

[3][*Explanation II.*—For the purpose of clause (c) a person shall be deemed to incite or encourage the practice of "untouchability" —

*(i)* if he, directly or indirectly, preaches "untouchability" or its practice in any form; or

*(ii)* if he justifies, whether on historical, philosophical or religious grounds or on the ground of any tradition of the caste system or on any other ground, the practice of "untouchability" in any form.]

---

[2] Renumbered by s.9, ibid., (w.e.f.19-11-1976).

[3] Ins. by s.9 ibid., (w.e.f.19-11-1976).

[4] Ins. by s. 10 *ibid*, (w.e.f. 19-11-1976).

[2][(ஈ) பட்டியல் சாதியொன்றைச் சேர்ந்த ஒருவரை "தீண்டாமை" காரணமாகப் பழிக்கின்ற அல்லது பழிக்க முயலுகிற]

எவராயினும், [3][ஒரு மாதத்திற்குக் குறையாததும், ஆறு மாதங்களுக்கு மேற்படாததுமான ஒரு காலஅளவுக்குச் சிறைத்தண்டனையும், அதோடுகூட நூறு ரூபாய்க்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாததுமான அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.]

[4][விளக்கம் I].—(அ) மற்றோர் ஆளுக்கு வீடு அல்லது நிலம் எதையும் வாடகைக்குவிட மறுக்கிற அல்லது பயன்படுத்துவதற்கு அல்லது அனுபோகம் செய்வதற்கு அத்தகைய மற்றவரை அனுமதிக்க மறுக்கிற அல்லது அத்தகைய மற்றவரோடு நடவடிக்கை வைத்துக்கொள்ளவோ, அவரிடம் கூலிக்கு வேலை செய்யவோ, அவருடன் வியாபாரம் செய்யவோ வாடிக்கையான பணியை அவருக்குச் செய்யவோ அல்லது அவர் செய்வதை ஏற்றுக் கொள்ளவோ மறுக்கிற, அல்லது மேற்சொன்னவற்றில் எவற்றையும் அத்தகையவை எந்த ஷரத்துகளின்படி நடவடிக்கைகளின் சாதாரணப் போக்கில் செய்யப்படுமோ அந்த ஷரத்துகளின்படி செய்ய மறுக்கிற, அல்லது

(ஆ) அத்தகைய மற்றவருடன் சாதாரணமாக வைத்துக் கொள்ளும் சமூக, தொழில் அல்லது வியாபாரத் தொடர்புகளைத் தவிர்க்கிற

ஓர் ஆள், அத்தகைய மற்ற ஆளை விலக்கிவைப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[5][விளக்கம் **II**.—ஓர் ஆள்—

(i) அவர் நேரடியாகவோ மறைமுகமாகவோ, "தீண்டாமை"யை அல்லது எந்த வடிவத்திலும் அதைப் பயிலுவதைப் போதிப்பாரானால், அல்லது

(ii) அவர், வரலாற்று, தத்துவ அல்லது சமய ஆதாரங்களின் பேரில் அல்லது சாதிமுறை மரபு ஏதொன்றின் ஆதாரத்தின் பேரிலும் அல்லது வேறேதேனும் ஆதாரத்தின் பேரில், "தீண்டாமை"யை எந்த வடிவத்திலும் பயிலுவது சரியென்று காட்டுவாரானால்

(இ) கூறின் நோக்கதைப் பொறுத்தமட்டில், "தீண்டாமை"யைப் பயிலுவதைத் தூண்டுவதாக அல்லது ஊக்குவிப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.]

---

2. அதே சட்டத்தின் 9 ஆவது பிரிவினால் (19—11—1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.

3. அதே சட்டத்தின் 9 ஆவது பிரிவினால் சில சொற்களுக்குப் பதிலாக (19—11—1976 முதல் அமலுக்கு வருமாறு) அமைக்கப்பட்டது.

4. அதே சட்டத்தின் 9 ஆவது பிரிவினால் (19—11—1976 முதல் அமலுக்கு வருமாறு) மறு எண்ணிடப்பட்டது.

5. அதே சட்டத்தின் 9 ஆவது பிரிவினால் (19—11—1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.

[1][(1A) Whoever commits any offence against the person or property of any individual as a repraisal or revenge for his having exercised any right accruing to him by reason of the abolition of "untouchability" under article 17 of the Constitution, shall, where the offence is punishable with imprisonment for a term exceeding two years, be punishable with imprisonment for a term which shall not be less than two years and also with fine.]

(2) whoever--

*(i)* denies to any person belonging to his community or any section thereof any right or privilege to which such person would be entitled as a member or such community or section, or

*(ii)* takes any part in the ex-communication of such person, on the ground that such person has refused to practice "untouchability" or that such person has done any act in furtherance of the objects of this Act.

[1][shall be punishable with imprisonment for a term of not less than one month and not more than six months, and also with fine which shall be not less than one hundred rupees and not more than five hundred rupees].

Unlawful compulsory labour when to be deemed to be a practice of untouchability.

[4][**7A.** (1) Whoever comples any person, on the ground of "untouchability" to do any scavenging or sweeping or to remove any carcass or to flay any animal or to remove the umbilical cord or to do any other job of a similar nature, shall be deemed to have enforced a disability arising out of "untouchability".

(2) Whoever is deemed under sub-section (1) to have enforced a disability arising out of "untouchability" shall be punishable with imprisonment for a term which shall not be less than three months and not more than six months and also with fine which shall not be less than one hundred rupees and not more than five hundred rupees.

*Explanation.*—For the purpose of this section. "compulsion" includes a threat of social or economic boycott.]

[1] Subs. by Act 106 of 1976, s.9 for certain words (w.e.f.19-11-1976).

[4] Ins. by s.10, *ibid.*, (w.e.f.19-11-1976).

[1][(அ) 1. தனிமனிதர் எவருடைய உடல் அல்லது உடைமைக்கும் எதிராக, அவருக்கு அரசமைப்பின் 17-ஆவது உறுப்பின்படி "தீண்டாமை" ஒழிப்பின் காரணத்தால் வந்தடைகிற உரிமை எதையும் அவர் செலுத்தியிருப்பதற்காக எதிர்த்தாக்குலாகவோ பழிக்குப் பழியாகவோ குற்றம் எதையும் செய்யும் எவராயினும், அந்தக் குற்றம் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்துக்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கத்தக்கதாயிருக்குமிடத்து, இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத கால அளவுக்குச் சிறைத் தண்டனையும், அதோடுகூட அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.]

(2). (i) தம் இனத்தைச் சேர்ந்த அல்லது அதன் பிரிவு எதையும் சேர்ந்த ஆள் எவருக்கும், அத்தகைய இனத்தின் அல்லது பிரிவின் உறுப்பினர் என்ற முறையில் அத்தகைய ஆள் பாத்தியதை கொண்டிருக்கும் உரிமை அல்லது சிறப்புரிமை எதையும் மறுக்கிற, அல்லது

(ii) அத்தகைய ஆள், "தீண்டாமை"யைப் பயிலுவதற்கு மறுத்திருக்கிறார் என்ற காரணத்தின் பேரிலோ, அத்தகைய ஆள், இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் முகமாக செய்கை எதையும் செய்திருக்கிறார் என்ற காரணத்தின் பேரிலோ அத்தகைய ஆளைச் சாதியிலிருந்து விலக்கி வைப்பதில் பங்கு எதுவும் எடுத்துக் கொள்கிற

எவராயினும், [2][ஒரு மாதத்திற்குக் குறையாததும், ஆறு மாதங்களுக்கு மேற்படாததுமான ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனையும் அதோடுகூட நூறு ரூபாய்க்குக் குறையாததும், ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாததுமான அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படதக்கவராவார்.]

சட்ட விரோதமான கட்டாய உழைப்பானது தீண்டாமையைப் பயிலும் ஒன்றாக எப்போது கொள்ளப்படுதல் வேண்டும்.

[3][7(அ). (1)"தீண்டாமை" என்னும் காரணத்தின் பேரில், எந்த ஆளையும் தோட்டி வேலை அல்லது கூட்டும் வேலை எதையும் செய்ய அல்லது பிணம் எதையும் அப்புறப்படுத்த அல்லது விலங்கு ஏதொன்றின் தோலையும் உரிக்க அல்லது கொப்பூழ்க் கொடியை அகற்ற அல்லது அது போன்ற தன்மையதான வேறு வேலை எதையும் செய்யக் கட்டாயப்படுத்துகிற எவராயினும், "தீண்டாமை"யினின்று எழுகின்ற முட்டுப்பாட்டை வற்புறுத்துயிருப்பவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆவது உட்பிரிவின்படி, "தீண்டாமை"யினின்று எழுகின்ற முட்டுப்பாட்டை வற்புறுத்துயிருப்பவராகக் கொள்ளப்படும் எவராயினும், மூன்று மாதங்களுக்குக் குறையாததும், ஆறு மாதங்களுக்கு மேற்படாததுமான சிறைத்தண்டனையும், அதோடுகூட நூறு ரூபாய்க்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாததுமான அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

விளக்கம்.—இந்தப் பிரிவின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில், "வற்புறுத்துதல்" என்பது, சமூக அல்லது பொருளாதார விலக்கிவைப்புச் செய்வதாக அச்சுறுத்துதலை உள்ளடக்கும்.]

---

1. 1976-ஆம் ஆண்டு 106ஆவது சட்டத்தின் 9—வது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.

2. அதே சட்டத்தின் 9-வது பிரிவினால் சில சொற்களுக்குப் பதிலாக (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) அமைக்கப்பட்டது.

3. அதே சட்டத்தின் 10-வது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.

Cancellation or suspension of licences in certain cases.

**8.** When a person who is convicted of an offence under section 6 holds any licence under any law for the time being in force in respect of any profession, trade, calling or employment in relation to which the offence is committed, the court trying the offence may, without prejudice to any other penalty to which such person may be liable under that section, direct that the licence shall stand cancelled or be suspended for such period as the court may deem fit, and every order of the court so cancelling or suspending a licence shall have effect as if it had been passed by the authority competent to cancel or suspend the licence under any such law.

Explanation.—In this section, "licence" includes a permit or a permission.

Resumption or suspension of grants made by Government.

**9.** Where the manager or trustee of a place of public worship [1][or any educational institution or hostel] which is in receipt of a grant of land or money from the Government is convicted of an offence under this Act and such conviction is not reversed or quashed in any appeal or revision, the Government may, if in its opinion the circumstances of the case warrant such a course, direct the suspension or resumption of the whole or any part of such grant.

Abetment of offence.

**10.** Whoever abets any offence under this Act shall be punishable with the punishment provided for the offence.

[2][Explanation.—A public servant who wilfully neglects the investigation of any offence punishable under this Act shall be deemed to have abetted an offence punishable under this Act.]

Power of State Government to impose collective fine.

[3][**10A.** (1) If, after an inquiry in the prescribed manner, the State Government is satisfied that the inhabitants of an area are concerned in, or abetting the commission of, any offence punishable under this Act, or harbouring person concerned in the commission of such offence or failing to render all the assistance in their power to discover or aprehend the offender or offenders or suppressing material evidence of the commission of such offence, the State Government may, by notification in the Official Gazette, impose a colllective fine on such inhabitants and apportion such fine amongst the inhabitants who are liable collectively to pay it, and such apportionment shall be made according to the State Government's judgment of the respective means of such inhabitants and in making any such apportionment the State Government may assign a portion of such fine to a Hindu undivided family to be payable by it:

[1] Ins.by Act 106 of 1976, s.11 (w.e.f.19-11-1976).
[2] Ins.by s. 12, *ibid.*, (w.e.f.19-11-1976).
[3] Ins.by s. 13, *ibid.*, (w.e.f.19-11-1976).

8. 6ஆவது பிரிவின்படி ஒரு குற்றத்திற்காகத் தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிற ஓர் ஆள், எந்தத் தொழில், வர்த்தகம், கொள்பணி அல்லது வேலை தொடர்பாக அக்குற்றம் செய்யப்பட்டிருக்கிறதோ அந்தத் தொழில், வர்த்தகம், கொள்பணி அல்லது வேலை எதையும் பொறுத்து, அவ்வப்போது அமலிலுள்ள சட்டம் ஏதொன்றின்படியும் உரிமம் எதையும் வைத்திருக்கும்போது, அந்தக் குற்றத்தை விசாரிக்கும் நீதிமன்றம், அத்தகையவர் அந்தப் பிரிவின்படி ஆளாகலாகும் வேறு தண்டனை எதற்கும் பாதகமன்னியில், அந்த உரிமம் ரத்தாகி நிற்கும் என்று அல்லது நீதிமன்றம் தக்கதெனக் கருதலாகும் காலத்துக்குத் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படும் என்று உத்தரவிடலாம், மற்றும் உரிமம் ஒன்றை அவ்வாறு ரத்து செய்யும் அல்லது தற்காலிகமாக நிறுத்திவைக்கும் நீதிமன்றத்தின் கட்டளை ஒவ்வொன்றும், அத்தகைய சட்டம் எதன்படியும் உரிமத்தை ரத்து செய்வதற்கோ தாற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கோ தகுதியுடைய அதிகார ஆயத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்தாற் போன்று செயற்படுதல் வேண்டும். குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் உரிமங்களை ரத்து செய்தல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்.

***விளக்கம்.***—இந்தப் பிரிவில், "உரிமம்" என்பது, ஓர் அனுமதிச் சீட்டை அல்லது ஓர் அனுமதியை உள்ளடக்கும்.

9. அரசாங்கத்திடமிருந்து நிலத்தை அல்லது பணத்தை மானியமாகப் பெறுகிற பொது வழிபாட்டிடம் [1][அல்லது கல்வி நிறுவனம் அல்லது விடுதி ஏதொன்றின்] மேலாளர் அல்லது கட்டளைக்காரர் இந்தச் சட்டத்தின்படி ஒருக்குற்றத்திற்குத் தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டிருந்து அத்தகையத் தண்டனைத் தீர்ப்பானது மேல்முறையீடு அல்லது மேலாய்வு எதிலும் எதிர்மாறாக்கப்படாமல் அல்லது நசிக்கப்படாமல் இருக்குமிடத்து, அரசாங்கம், வழக்கின் சூழ்நிலைகள் அத்தகைய நடவடிக்கை எடுப்பதை நியாயப்படுத்துவதாகத் தாம் கருதினால், அத்தகைய மானியம் முழுவதையும் அல்லது அதன் பகுதி எதையும் தாற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கு அல்லது மீட்டல் செய்வதற்கு உத்தரவிடலாம். அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட மானியங்களை மீட்டல் அல்லது தாற்காலிகமாக நிறுத்தி வைத்தல்.

10. இந்தச் சட்டத்தின்படியுள்ள யாதொரு குற்றத்திற்கும் உடந்தையாயிருக்கிறவர் எவராயினும், அந்தக் குற்றத்திற்கு வகை செய்யப்பட்டுள்ள தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார். குற்றத்திற்கு உடந்தையாயிருத்தல்.

[2][விளக்கம்.—இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றம் எதையும் விசாரணை செய்வதை வேண்டுமென்றே புறக்கணிக்கிற ஒரு பொது ஊழியர் இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க ஒருக்குற்றத்திற்கு உடந்தையாயிருந்திருக்கிறார் என்று கொள்ளப்படுதல் வேண்டும்.]

[3][**10(அ)** *(1)* ஒரு பிரதேசத்தின் குடிகள் இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றம் ஏதொன்றிலும் சம்பந்தப்பட்டிருப்பதாக அல்லது அதைச் செய்வதில் உடந்தையாயிருப்பதாக அல்லது அத்தகைய குற்றத்தைச் செய்வதில் சம்பந்தப்பட்ட ஆட்களுக்குப் புகலிடம் அளிக்கின்றதாக அல்லது குற்றம் செய்பவர் அல்லது குற்றம் செய்பவர்களைக் கண்டுபிடிக்க அல்லது கைது செய்ய துங்களுடைய சக்திக்கு உட்பட்ட உதவி எல்லாவற்றையும் அளிக்கத் தவறியிருக்கின்றதாக அல்லது அத்தகைய குற்றம் செய்யப்பட்டதற்கான முக்கியமான அல்லது அத்தகைய குற்றம் செய்யப்பட்டதற்கான முக்கியமான சாட்சியத்தை மறைத்துவைத்திருக்கின்றதாக மாநில அரசாங்கமானது விதிக்கப்பட்ட முறைப்படி பரிசீலனை செய்த பின்பு திருப்தி கொள்ளுமானால், அதிகாரபூர்வமான அரசிதழில் அறிவிக்கை வாயிலாக அத்தகைய குடிகள் மீது மாநில அரசாங்கம் கூட்டு அபராதம் விதிக்கலாம்; மற்றும் அதனைக் கூட்டாகச் செலுத்தக் கடப்பாடுடைய பிரதேசக் குடிகளிடையே அத்தகைய அபராதத்தைப் பங்கீடு செய்யலாம்; மேலும் அத்தகைய பிரதேசக் குடிகள் ஒவ்வொருவருக்குமுரிய பண வசதி பற்றிய மாநில அரசாங்கத்தின் மதிப்பீட்டிற்கு இணங்க அத்தகைய பங்கீடு செய்யப்படுதல் வேண்டும்; மேலும் அத்தகைய பங்கீடு எதையும் செய்யுங்கால் பிரிவினையாகாத ஓர் இந்துக் குடும்பத்தால் செலுத்தத்தக்கது என்று மாநில அரசாங்கம் அதன்மீது அத்தகைய அபராதத்தின் ஒரு பகுதியைச் சாட்டலாம்; கூட்டு அபராதம் விதிப்பதற்கு மாநில அரசாங் கத்துக்குள்ள அதிகாரம்.

---

1. 1976-ஆம் ஆண்டு 106ஆவது சட்டத்தின் 11-வது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.

2. அதே சட்டத்தின 12-வது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.

3. அதே சட்டத்தின் 13-வது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.

Provided that the fine apportioned to an inhabitant shall not be realised until the petition, if any, filed by him under sub-section (3) is disposed of.

(2) The notification made under sub-section (1) shall be proclaimed in the area by beat of drum or in such other manner as the State Government may think best in the circumstances to bring the imposition of the collective fine to the notice of the inhabitants of the said area.

(3) (a) Any person aggrieved by the imposition of the collective fine under sub-section (1) or by the order of apportionment, may, within the prescribed period, file a petition before the State Government or such other authority as that Government may specify in this behalf for being exempted from such fine or for modification of the order or apportionment:

Provided that no fee shall be charged for filing such petition.

(b) The State Government or the authority specified by it shall, after giving to the petitioner a reasonable opportunity of being heard, pass such order as it may thing fit:

Provided that the amount of the fine exempted or reduced under this section shall not be realisable from any person, and the total fine imposed on the inhabitants of an area under sub-section (1) shall be deemed to have been reduced to that extent.

(4) Notwithstanding anything contained in sub-section (3), the State Government may exempt the victims of any offence punishable under this Act or any person who does not, in its opinion, fall within the category of persons specified in sub-section (1), from the liability to pay collective fine imposed under sub-section (1) or any portion thereof.

2 of 1974 (5) The portion of collective fine payable by any person (including a Hindu undivided family) may be recovered in the manner provided by the Code of Criminal procedure, 1973, for the recovery of fines imposed by a Court as if such portion were a fine imposed by a Magistrate.]

ஆனால், குடி ஒருவருக்குப் பங்கீடு செய்யப்பட்ட அபராதமானது, அவரால் (3) ஆவது உட்பிரிவின்படி தாக்கல் செய்யப்பட்ட மனு, ஏதேனுமிருப்பின், அது முடிவு செய்யப்படும் வரையில் வசூலிக்கப்படுதல் ஆகாது.

(2) கூட்டு அபராதம் சுமத்தப்பட்டிருப்பதை மேற்சொன்ன பிரதேசக் குடிகளின் கவனத்திற்குக் கொண்டுவருவதன் பொருட்டு (1) ஆவது உட்பிரிவின்படி செய்யப்பட்ட அறிவிக்கையை அந்தப் பிரதேசத்தில் தமுக்கு அடிப்பதன் மூலம் அல்லது அந்தந்தச் சூழ்நிலைகளில் மிகச் சிறந்ததென மாநில அரசாங்கம் கருதுகிற வேறுமுறையில் பகிரங்கப்படுத்துதல் வேண்டும்.

(3) (அ) (1) ஆவது உட்பிரிவின்படி கூட்டு அபராதம் சுமத்தப்பட்டதால் அல்லது பங்கீடு செய்யும் கட்டளையினால் குறையுற்ற ஆள் எவரும், அத்தகைய அபராதத்திலிருந்து விலக்களிக்கப்படுவதற்காக அல்லது பங்கீடு செய்யும் கட்டளையில் மாற்றம் செய்வதற்காக, மாநில அரசாங்கத்தின் முன்பு அல்லது இதற்கென அந்த அரசாங்கம் குறித்துரைக்கலாகும் வேறு அதிகார ஆயத்தின் முன்பு விதிக்கப்பட்ட காலத்திற்குள் மனு ஒன்றைத் தாக்கல் செய்யலாம்;

ஆனால், அத்தகைய மனுவைத் தாக்கல் செய்வதற்குக் கட்டணம் எதுவும் விதிக்கப்படலாகாது.

(ஆ) மாநில அரசாங்கம் அல்லது அதனால் குறித்துறைக்கப்படுகிற அதிகார ஆயம் மனுதாரருக்கு நியாயமான கேள்வி வாய்ப்பு ஒன்றை நல்கிய பின்பு, தான் பொருத்தமெனக் கருதலாகும் கட்டளையைப் பிறப்பித்தல் வேண்டும்;

ஆனால், இந்தப் பிரிவின்படி விலக்களிக்கப்பட்ட அல்லது குறைக்கப்பட்ட அபராதத் தொகை, எந்த ஆளிடமிருந்தும் வசூலிக்கப்படத்தக்கது ஆகாது; மேலும் (1) ஆவது உட்பிரிவின்படி அந்தப் பிரதேசக் குடிகளின் மீது சுமத்தப்பட்ட மொத்த அபராதம் அந்த அளவுக்குக் குறைக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) (3) ஆவது உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், மாநில அரசாங்கம் இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றம் எதற்கும் இரையானவர்களுக்கோ அல்லது அதன் கருத்தின்படி (1) ஆவது உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்கள் வகையின்கீழ் வராத ஆள் எவருக்குமோ, (1) ஆவது உட்பிரிவின்படி சுமத்தப்பட்ட கூட்டு அபராதத்தை அல்லது அதன் பகுதி எதையும் செலுத்துவதற்கான கடப்பாட்டிலிருந்து விலக்களிக்கலாம்.

2/1974 (5) (பிரிவினையாகாத ஓர் இந்துக் குடும்பம் உள்ளடங்கலாக) ஆள் எவராலும் செலுத்தப்படத்தக்கக் கூட்டு அபராதத்தின் பகுதியானது, அத்தகைய பகுதி ஒரு நடுவரால் சுமத்தப்பட்ட அபராதமாக இருந்தாற்போன்றே நீதிமன்றத்தால் சுமத்தப்பட்ட அபராதங்களை வசூலிப்பதற்கு 1973-ஆம் ஆண்டு குற்ற விசாரணைமுறைச் சட்டத்தால் வகைசெய்யப்பட்டுள்ள முறையில் வசூலிக்கப்படலாம்.

Enhanced penalty on subsequent conviction.

**11.** Whoever having already been convicted of an offence under this Act or of an abetment of such offence is again convicted of any such offence or abetment [1][shall, on conviction, be punishable—

(a) for the second offence, with imprisonment for a term of not less than six months and not more than one year, and also with fine which shall be not less than two hundred rupees and not more than five hundred rupees;

(b) for the third offence or any offence subsequent to the third offence, with imprisonment for a term of not less than one year and not more than two years, and also with fine which shall be not less than five hundred rupees and not more than one thousand rupees].

Presumption by courts in certain cases.

**12.** Where any act constituting an offence under this Act is committed in relation to a member of a Scheduled Caste[2]* * *, the court shall presume, unless the contrary is proved, that such act was committed on the ground of "untouchability".

Limitation of jurisdiction of civil courts.

**13.** (1) No civil court shall entertain or continue any suit or proceeding or shall pass any decree or order or execute wholly or partially any decree or order if the claim involved in such suit or proceeding or if the passing of such decree or order or if such execution would in any way be contrary to the provisions of this Act.

(2) No court shall, in adjudicating any matter or executing any decree or order, recognise any custom or usage imposing any disability on any person on the ground of "untouchabiluty".

---

1 Subs, by Act 106 of 1976, s.14, for certain words (w.e.f.19-11-1976).

2 The words "as defined in clause (2A) of article 366 of Constitution omitted by s. 15,*ibid.*, (w.e.f.19-11-1976).

11. இந்தச் சட்டத்தின்படி ஒரு குற்றத்திற்காக அல்லது அத்தகைய குற்றத்திற்கு உடந்தையாக இருந்ததற்காக முன்னமேயே தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்து, அத்தகைய குற்றம் அல்லது உடந்தை எதற்காகவும் மீண்டும் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட எவராயினும் , [1][தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பேரில்,—

பிந்திய தண்டனைத் தீர்ப்பின் பேரில் அதிகரிக்கப் பட்ட தண்டனை.

(அ) இரண்டாவது குற்றத்திற்காக ஆறு மாதங்களுக்குக் குறையாததும் ஓராண்டிற்கு மேற்படாததுமான ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையும், அதோடுகூட இருநூறு ரூபாய்க்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாததுமான அபராதமும் விதித்து,

(ஆ) மூன்றாவது குற்றத்திற்காக அல்லது மூன்றாவது குற்றத்திற்குப் பிந்திய குற்றம் எதற்காகவும் ஓராண்டிற்குக் குறையாததும் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாததுமான ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையும், அதோடுகூட ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாததும் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாததுமான அபராதமும் விதித்து,

தண்டிக்கப்படத்தக்கவராவார்.]

12. இந்தச் சட்டத்தின்படி குற்றமாக அமைகின்ற செய்கை எதுவும் [2]*** பட்டியல் சாதியைச் சேர்ந்த ஒருவர் சம்பந்தமாகச் செய்யப்படுமிடத்து, மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, "தீண்டாமை" காரணமாக அத்தகைய செய்கை செய்யப்பட்டது என்று நீதிமன்றம் அனுமானித்தல் வேண்டும்.

ஒருசில வழக்குகளில் நீதி மன்றங்கள் செய்ய வேண்டிய அனுமானம்.

13. (1) உரிமைவழக்கு நீதிமன்றம் எதுவும், உரிமைவழக்கு அல்லது நடவடிக்கை எதையும் ஏற்றுக் கொள்ளுதலோ அல்லது தொடர்ந்து நடத்துதலோ ஆகாது, அல்லது தீர்ப்பாணை அல்லது கட்டளை எதையும் பிறப்பித்தலோ அல்லது தீர்ப்பாணை அல்லது கட்டளை எதனையும் முழுமையாக அல்லது பகுதியாக நிறைவேற்றுதலோ ஆகாது, அத்தகைய உரிமைவழக்கில் அல்லது நடவடிக்கையில் உள்ளடங்கியிருக்கிற உரிமைக்கோரிக்கையானது அல்லது அத்தகைய தீர்ப்பாணை அல்லது கட்டளையைப் பிறப்பித்தலானது அல்லது அத்தகைய நிறைவேற்றுதலானது எந்த வகையிலும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணானதாக இருக்குமேயானால்.

உரிமை வழக்கு நீதிமன்றங் களுடைய அதிகார வரம்பின் வரையறை.

(2) நீதிமன்றம் எதுவும், எந்த விஷயத்தையும் நீதிமுறையில் தீர்மானிக்குங்கால் அல்லது தீர்ப்பாணை அல்லது கட்டளை எதையும் நிறைவேற்றுங்கால் "தீண்டாமை" என்னும் காரணத்தின் பேரில், எந்த ஆளின் மீதும், முட்டுப்பாடு எதனையும் சுமத்தும் வழக்கம் அல்லது வழக்காறு எதையும் அங்கீகரித்தல் ஆகாது.

---

1. 1976 ஆம் ஆண்டு 106 ஆவது சட்டத்தின் 14 ஆவது பிரிவினால் சில சொற்களுக்குப் பதிலாக (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) அமைக்கப்பட்டது.

2. அதே சட்டத்தின் 15ஆவது பிரிவினால் "அரசமைப்பு 366 ஆவது உறுப்பின் 2 (அ) கூறில் இலக்கணம் கூறப்பட்டவாறான" என்ற சொற்கள் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) விட்டுவிடப்பட்டன.

Offences by companies.

**14.** (1) If the person committing an offence under this Act is a company every person who at the time the offence was committed was a charge of, and was responsible to the company for the conduct of the business of the company, shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly:

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment, if he proves that the offence was committed without his knowledge or that he exercised all due diligence to prevent the commission of such offence.

(2) Notwithstanding anything contained in sub-section (I), where an offence under this Act has been committed with the consent of any director or manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer shall also be deemed to be guilty of that offence and shall be liable to be proceeded against and punished accordingly.

Explanation.-For the purposes of this section,—

(a) "company" means any body corporate and inculdes a firm or other association of individuals; and

(b) "director" in relation to a firm means a partner in the firm.

Protection of action taken in good faith.

[1][**14A.** (1) No suit, prosecution or other legal proceeding shall lie against the Central Government or a State Government for anything which is in good faith done or intended to be done under this Act.

(2) No suit or other legal proceeding shall lie against the Central Government or State Government for any damage caused or likely to be caused by anything which is in good faith done or intened to be done under this Act.]

Offences to be cognizable and triable summarily.

[2][**15.** (1) Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1973, every offence punishable under this Act shall be cognizable and every such offence, except where it is punishable with imprisonment for a minimum term exceeding three months may be tried summarily by a Judical Magistrate of the first class or in a metro politan area by a Metropolitan Magistrate in accordance with the procedure specified in the said Code. 2 of 1974

[1] Ins. by Act 106 of 1976, S.16 (w.e.f.19-11-1976).
[2] Subs. by S.17, *ibid*, for S.15 (w.e.f.19-11-1976).

**14.** (1) இந்த சட்டத்தின்படி குற்றமொன்றைச் செய்யும் ஆள் ஒரு கம்பெனியாக இருந்தால், குற்றம் செய்யப்பட்டபொழுது, கம்பெனியின் அலுவலை நடத்துவதற்காக அக் கம்பெனியின் பொறுப்பைக் கொண்டிருந்த மற்றும் அதற்குப் பொறுப்பாயிருந்த ஒவ்வோர் ஆளும், அந்தக் குற்றத்தைச் செய்தவராகக் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் தண்டிக்கப்படுவதற்கும் ஆளாதல் வேண்டும். கம்பெனிகளால் செய்யப்படும் குற்றங்கள்.

ஆனால், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் அத்தகைய ஆள் எவரையும் எந்தத் தண்டனைக்கும் ஆளாக்காது, அந்தக் குற்றமானது அவருக்குத் தெரியாமல் செய்யப்பட்டது என்றோ, அல்லது அத்தகைய குற்றம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு உரிய சிரத்தை எல்லாவற்றையும் அவர் மேற்கொண்டார் என்றோ அவர் மெய்ப்பித்தால்.

(2). (1) ஆவது உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின்படியான ஒரு குற்றமானது அந்தக் கம்பெனியின் இயக்குனர் அல்லது மேலாளர், செயலாளர் அல்லது வேறு அலுவலர் எவரின் சம்மதத்துடன் செய்யப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய இயக்குனர், மேலாளர், செயலாளர் அல்லது வேறு அலுவலருங்கூட அந்தக் குற்றத்தைச் செய்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும், தண்டிக்கப்படுவதற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

விளக்கம்.—இந்தப் பிரிவின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில்,—

(அ) "கம்பெனி" என்பது ஒரு கூட்டமைப்பு எதுவும் என்று பொருள்படும்; மற்றும் அது, ஒரு கூட்டுத்தொழில் நிறுவனத்தை அல்லது வேறு தனியாட்களின் கழகத்தை உள்ளடக்கும்; மற்றும்

(ஆ) "இயக்குனர்" என்பது ஒரு கூட்டுத்தொழில் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அந்தக் கூட்டுத்தொழில் நிறுவனத்தின் ஒரு கூட்டாளி என்று பொருள்படும்.

[1][**14அ.** (1) இந்தச் சட்டத்தின்படி நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும், மத்திய அரசாங்கத்துக்கு அல்லது ஒரு மாநில அரசாங்கத்துக்கு விரோதமாக உரிமை வழக்கு குற்ற வழக்கு அல்லது வேறு சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது. நல்லெண்ணத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

(2) இந்தச் சட்டத்தின்படி நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதனாலும் விளைந்த அல்லது அநேகமாக விளையக்கூடிய சேதம் எதற்காகவும், மத்திய அரசாங்கத்துக்கு அல்லது ஒரு மாநில அரசாங்கத்துக்கு விரோதமாக உரிமை வழக்கு அல்லது வேறு சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.]

2/1974 [2][**15.** (1). 1973 ஆம் ஆண்டு குற்ற விசாரணைமுறைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றம் ஒவ்வொன்றும் கைது செய்தற்குரியதாக இருத்தல் வேண்டும், மற்றும் அத்தகைய குற்றம் ஒவ்வொன்றும் குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கத்தக்கதாக இருக்குமிடத்தன்றி, முதல் வகுப்பு நீதித் துறை நடுவர் ஒருவராலோ பெருநகர்ப் பிரதேசத்தில் பெருநகர் நடுவர் ஒருவரலோ, மேற்சொன்ன சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட விசாரணைமுறைக்கிணங்க சுருக்குமுறையில் விசாரிக்கப்படலாம். குற்றங்கள் கைது செய்தற்குரியன வாகவும் சுருக்கு முறையில் விசாரிக்கத் தக்கனவாகவும் இருத்தல் வேண்டும்.

---

1. 1976 ஆம் ஆண்டு 106 ஆவது சட்டத்தின் 16 ஆவது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.

2. அதே சட்டத்தின் 17 ஆவது பிரிவினால் 15 ஆவது பிரிவுக்குப் பதிலாக (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) அமைக்கப்பட்டது.

(2) Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1973, when any public servant is alleged to have committed the ;offence of abetment of an offence punishable under this Act, while acting or purporting to act in the discharge of his official duty, no court shall take cognizance of such offence of abetment except with the previous sanction— 2 of 1974

*(a)* of the Central Government, in the case of a person employed in connection with the afairs of the Union; and

*(b)* of the State Government, in the case of a person employed in connection with the affairs of a State.

Duty of State Government to ensure that the rights accruing from the abolition of "untouchability" may be availed of by the concerned persons.

**15A.** (1) Subject to such rules as the Central Government may make in this behalf, the State Government shall take such measures as may be necessary for ensuring that the rights arising from the abolition of "untouchability" are made available to, and are availed of by, the persons subjected to any disability arising out of "untouchability"

(2) In particular, and without prejudice to the generality of the provisions of sub-section *(1)*, such measures may include—

*(i)* the provision of adequate facilities, including legal aid, to the persons subjected to any disability arising out of "untouchability" to enable them to avail themselves of such rights;

*(ii)* the appointment of officers for initiating or exercising supervision over prosecutions for the contravention of the provisions of this Act;

*(iii)* the setting up of special courts for the trial of offences under this Act;

*(iv)* the setting up of Committees at such appropriate levels as the State Government may think fit to assist the State Government in formulating or implementing such measures;

*(v)* provision for a periodic survey of the working of the provisions of this Act with a view to suggesting measures for the better implementation of the provisions of this Act;

*(vi)* the identification of the areas where persons are under any disability arising out of "untouchability" and adoption of such measures as would ensure the removal of such disability from such areas.

(3) The Central Government shall take such steps as may be necessary to co-ordinate the measures taken by the State Government under sub-section (1).

2/1974 (2). 1973 ஆம் ஆண்டு குற்ற விசாரணைமுறைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், பொது ஊழியர் எவரும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க ஒரு குற்றத்திற்கு உடந்தையாயிருக்கும் குற்றத்தை அவரது அலுவல்முறைக் கடமையை ஆற்றுவதில் செயற்பட்டுக் கொண்டிருக்குங்கால் அல்லது செயற்பட்டுக் கொண்டிருப்பதாகப் புலப்படுங்கால் செய்திருப்பதாகச் சொல்லப்படும்போது—

(அ) ஒன்றியத்தின் விவரங்கள் சம்பந்தமாக பணி ஆற்றும் ஓர் ஆளைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்கத்தின், மற்றும்

(ஆ) மாநிலத்தின் விவகாரங்கள் சம்பந்தமாகப் பணி ஆற்றும் ஓர் ஆளைப் பொறுத்தவரையில், மாநில அரசாங்கத்தின், முன் ஒப்பளிப்புடனன்றி, அத்தகைய உடந்தைக் குற்றத்தை நீதிமன்றம் எதுவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது.

"தீண்டாமை" ஒழிப்பினால் வந்தடைகிற உரிமைகள், சம்பந்தப்பட்ட ஆட்களால் பயன்படுத்திக் கொள்ளப் படுவதை உறுதி செய்வதற்கு மாநில அரசாங்கத்திற்குள்ள கடமை.

**15 (அ)** (1) மத்திய அரசாங்கம் இதற்கெனச் செய்யலாகும் விதிகளுக்கு உட்பட்டு, தீண்டாமையிலிருந்து எழுகிற முட்டுப்பாடு எதற்கும் உள்ளாக்கப்பட்டிருக்கின்ற ஆட்களுக்குத் தீண்டாமை ஒழிப்பினால் எழுகின்ற உரிமைகள் கிட்டுவதையும், அவர்கள் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதையும் உறுதி செய்வதற்கு அவசியமாகலாகும் நடவடிக்கைகளை மாநில அரசாங்கம் எடுத்தல் வேண்டும்.

(2) குறிப்பாகவும், (1) ஆவது உட்பிரிவின் வகைமுறைகளின் பொதுப்பாங்கிற்குப் பாதகமன்றியிலும், அத்தகைய நடவடிக்கைகள்:—

(i) தீண்டாமையிலிருந்து எழுகின்ற முட்டுப்பாடு எதற்கும் உள்ளாக்கப்பட்டிருக்கின்ற ஆட்கள் அத்தகைய உரிமைகளைப் பயன்படுத்துவதை ஏல்விப்பதற்கு சட்ட உதவி உள்ளடங்கலாக போதிய வசதிகளுக்கு வகை செய்வது;

(ii) இந்த சட்டத்தின் வகைமுறைகளின் மீறுகைக்காக குற்ற வழக்குகளை தொடர்வதற்கு அல்லது குற்றவழக்குகளில் நடப்பதைக் கண்காணிப்பதற்கு அலுவலர்கள் நியமிப்பது;

(iii) இந்தச் சட்டத்தின்படியான குற்றங்களை விசாரிப்பதற்கு சிறப்பு நீதிமன்றங்களை நிறுவுவது;

(iv) அத்தகைய நடவடிக்கைகளை வகுத்தமைப்பதில் அல்லது நிறைவேற்றுவதில் மாநில அரசாங்கத்திற்கு உதவியளிக்க மாநில அரசாங்கம் பொருத்தமெனக் கருதலாகும் உரிய மட்டங்களில் குழுக்களை அமைப்பது;

(v) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை இன்னும் நன்றாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளைக் கூறும் பொருட்டு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் செயற்படுவதை காலாந்தர ஆய்வு செய்வதற்கு வகைசெய்வது;

(vi) "தீண்டாமை" யிலிருந்து எழுகிற முட்டுப்பாடு எதற்கும் உட்பட்டுள்ள ஆட்கள் இருக்கிற பிரதேசங்களைக் கண்டறிவது; மற்றும் அத்தகைய பிரதேசங்களிலிருந்து அத்தகைய முட்டுப்பாட்டை நீக்குவதை உறுதி செய்கிற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது;

ஆகியவற்றை உள்ளடக்கலாம்.

(3) (1) ஆவது உட்பிரிவின்படி மாநில அரசாங்கங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஒத்திணைப்பதற்கு அவசியமாகலாகும் நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் எடுத்தல் வேண்டும்.

(4) The Central Government shall, every year, place on the Table of each House of Parliament, a report on the measures taken by itself and by the State Government in Pursuance of the provisions of this section.]

Act to override other laws.

**16.** Save as otherwise expressly provided in this Act, the provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law for the time being in force, or any custom or usage or any instrument having effect by virtue of any such law or any decree or order of any court or other authority.

Probation of Offenders Act, 1958, not to apply to persons above the age of fourteen years.

[1]**[16A.** The provisions of the Probation of Offenders Act, 1958, shall not apply to any person above the age of fourteen years who is found guilty of having committed any offence punishable under this Act. 20 of 1958.

Power to make rules.

**16B.** (1) The Central Government may, by notification in the Official Gazette, make rules to carry out provisions of this Act.

(2) Every rule made by the Central Government under this Act shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament while it is in session for a total period of thirty days which may be comprised in one session or in two or more sucessive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in making any modification in the rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.]

Repeal.

**17.** The enactments specified in the Schedule are hereby repealed to the extent to which they or any of the provisions contained therein correspond or are repugnant to this Act or to any of the provisions contained therein.

---

[1] Ins. by Act 106 of 1976, S.18 (w.e.f.19-11-1976).

(1) மத்திய அரசாங்கம் இந்தப் பிரிவின் வகைமுறைகளையொட்டி தன்னாலும் மாநில அரசாங்கங்களாலும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையொன்றை ஒவ்வொர் ஆண்டும் நாடாளுமன்றத்தின் ஒவ்வொர் அவை முன்பும் வைத்தல் வேண்டும்.

**16.** இந்தச் செய்சட்டத்தில் வேறுவிதமாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, அவ்வப்போது அமலிலுள்ள வேறு சட்டம் எதிலும் அல்லது வழக்கம் அல்லது வழக்காறு எதிலும் அல்லது அத்தகைய சட்டம் எதன் காரணமாகவும் செயற்படுகிற முறையாவணம் எதிலும் அல்லது நீதிமன்றம் அல்லது வேறு அதிகார ஆயம் ஏதொன்றின் தீர்ப்பாணை அல்லது கட்டளை எதிலும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாததாக என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் செய்சட்டத்தின் வகைமுறைகளே செயற்படுதல் வேண்டும். செய்சட்டம் மற்றச் சட்டங்களை மீதூர்ந்து இயங்கும்.

20/1958 [1][**16அ.** இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றம் எதையும் செய்திருக்கும் குற்றவாளியென்று முடிவு செய்யப்பட்ட பதினான்கு வயதிற்கு மேற்பட்ட ஆள் எவர்மீதும் 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் கண்காணிப்புச் சட்டம் இயங்குதல் ஆகாது. 1958ஆம் ஆண்டு குற்றவாளிகள் கண்காணிப்புச் சட்டம் பதினான்கு வயதுக்கு மேற்பட்ட ஆட்களின் மீது இயங்குதல் ஆகாது.

**16ஆ.** (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசாங்கம் அதிகாரபூர்வமான அரசிதழில் அறிக்கை வாயிலாக விதிகள் செய்யலாம். விதிகள் செய்வதற்கு அதிகாரம்.

(2) இந்தச் சட்டத்தின்படி மத்திய அரசாங்கத்தால் செய்யப்படும் ஒவ்வொரு விதியும், அது செய்யப்பட்ட பின்பு கூடிய விரைவில் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் அது அமர்வில் இருக்கையில் ஒரு கூட்டத்தொடரிலோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களிளோ அடங்கியிருக்கலாகும் முப்பது நாட்கள் கொண்ட மொத்தக் கால அளவுக்கு அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மேற்சொன்ன கூட்டத் தொடர்களை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அந்த விதியில் மாறுதல் எதையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொண்டால் அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என்பதில் இரண்டு அவைகளும் ஒத்துக்கொண்டால் அதன்பின்பு அந்த விதி, அவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே அமலுக்கு வருதல் வேண்டும் அல்லது நிலவாத்திற்கேற்ப, அமலுக்கு வாராதிருத்தல் வேண்டும்; எனினும் அத்தகைய மாற்றம் அல்லது ரத்து எதுவும் அந்த விதியின்படி முன்னதாக செய்யப்பட்ட எதனுடைய செல்லுந் தன்மைக்கும் பாதகமின்றி இருத்தல் வேண்டும்.]

**17.** இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்களானவை அல்லது அவற்றில் அடங்கியுள்ள வகைமுறைகள் இந்தச் சட்டத்திற்கு அல்லது இதில் அடங்கியுள்ள வகைமுறைகள் எவற்றுக்கும் நேரிணையாக உள்ள அல்லது முரணாக இருக்கின்ற அளவுக்கு இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகின்றன. நீக்கம்.

---

1. 1976 ஆம் ஆண்டு 106 ஆவது சட்டத்தின் 18 ஆவது பிரிவினால் (19-11-1976 முதல் அமலுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.

## THE SCHEDULE.

(*See* Section 17.)

1. The Bihar Harijan (Removal of Civil Disabilities) Act, 1949 (Bihar Act XIX of 1949).
2. The Bombay Harijan (Removal of Social Disabilities) Act, 1946 ( Bombay Act X of 1947).
3. The Bombay Harijan Temple Entry Act, 1947 (Bombay Act XXXV of 1947).
4. The Central Provinces and Berar Scheduled Castes (Removal of Civil Disabilities) Act, 1947 (Central Provinces and Berar Act XXIV of 1947).
5. The Central Provinces and Berar Temple Entry Authorisation Act, 1947 (Central Provinces and Berar Act XLI of 1947).
6. The East Punjab (Removal of Religious and Social Disabilities) Act, 1948 (East Punjab Act XVI of 1948).
7. The Madras Removal of Civil Disabilities Act, 1938 (Madras Act XXI of 1938).
8. The Orissa Removal of Civil Disabilities Act, 1946 (Orissa Act XI of 1946).
9. The Orissa Temple Entry Authorisation Act, 1948 (Orissa Act XI of 1948).
10. The United Provinces Removal of Social Disabilities Act, 1947 (U.P. Act XIV of 1947).
11. The West Bengal Hindu Social Disabilities Removal Act, 1948 (West Bengal Act XXXVII of 1948).
12. The Hyderabad Harijan Temple Entry Regulation, 1358F (No. LV of 1358F Fasli).
13. The Hyderabad Harijan (Removal of Social Disabilities) Regulation, 1358F (No. LVI of 1358F Fasli).
14. The Madhya Bharat Harijan Ayogta Nivaran Vidhan Samvat 2005 (Madhya Bharat Act No. 15 of 1949).
15. The Removal of Civil Disabilities Act, 1943 (Mysore Act XLII of 1943).
16. The Mysore Temple Entry Authorisation Act, 1948 (Mysore Act XIV of 1948).
17. The Saurashtra Harijan (Removal of Social Disabilities) Ordinance (No. XL of 1948).
18. The Travancore-Cochin Removal of Social Disabilities Act, 1125 (Travancore-Cochin Act VIII of 1125)
19. The Travancore-Cochin Temple Entry (Removal of Disabilities) Act, 1950 (Travancore-Cochin Act XXVII of 1950).
20. The Coorg Scheduled Castes (Removal of Civil and Social Disabilities) Act, 1949 (Coorg Act I of 1949).
21. The Coorg Temple Entry Authorisation Act, 1949 (Coorg Act II of 1949).

## இணைப்புப்பட்டியல்

## (17 ஆவது பிரிவைக் காண்க)

1. 1949 ஆம் ஆண்டு பீகார் ஹரிஜன (குடியியல் முட்டுப்பாடுகள் நீக்கம்) சட்டம் (பீகார்ச் சட்டம் XIX/1949.)
2. 1946 ஆம் ஆண்டு பம்பாய் ஹரிஜன (சமூக முட்டுப்பாடுகள் நீக்கம்) சட்டம் (பம்பாய்ச் சட்டம் X/1947.)
3. 1947 ஆம் ஆண்டு பம்பாய் ஹரிஜன ஆலயப் பிரவேசச் சட்டம் (பம்பாய்ச் சட்டம் XXXV/1947.)
4. 1947 ஆம் ஆண்டு மத்திய மாகாணங்கள் மற்றும் பீரார் பட்டியல் சாதியினர் (குடியியல் முட்டுப்பாடுகள் நீக்கம்) சட்டம் (1947 ஆம் ஆண்டு மத்திய மாகாணங்கள் மற்றும் பீரார் சட்டம் XXIV/1947).
5. 1947 ஆம் ஆண்டு மத்திய மாகாணங்கள் மற்றும் பீரார் ஆலயப் பிரவேசம் அதிகாரமளிப்புச் சட்டம் (மத்திய மாகாணங்கள் மற்றும் பீரார் சட்டம். XLI/1947).
6. 1948 ஆம் ஆண்டு கிழக்குப் பஞ்சாப் (சமய மற்றும் சமூக முட்டுப்பாடுகள் நீக்கம்) சட்டம் (கிழக்கு பஞ்சாப் சட்டம் XVI/1948).
7. 1938 ஆம் ஆண்டு சென்னைக் குடியியல் முட்டுப்பாடுகள் நீக்கம் சட்டம் (சென்னைச் சட்டம் XXI/1938).
8. 1946 ஆம் ஆண்டு ஒரிஸ்ஸா குடியியல் முட்டுப்பாடுகள் நீக்கம் சட்டம் (ஒரிஸ்ஸா சட்டம் XI/1946).
9. 1948 ஆம் ஆண்டு ஒரிஸ்ஸா ஆலயப் பிரவேசம் அதிகாரமளிப்புச் சட்டம் (ஒரிஸ்ஸா சட்டம் XI/1948).
10. 1947 ஆம் ஆண்டு ஐக்கிய மாகாணங்கள் சமூக முட்டுப்பாடுகள் நீக்கம் சட்டம் (ஐக்கிய மாகாணங்கள் சட்டம் XIV/1947.)
11. 1948 ஆம் ஆண்டு மேற்கு வங்காள இந்து சமூக முட்டுப்பாடுகள் நீக்கம் சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXXVII/1948.)
12. 1358 ஆம் பசலி ஹைதராபாத் ஹரிஜன ஆலயப் பிரவேசம் ஒழுங்குமுறைச் சட்டங்கள் (எண் LV/1358 பசலி).
13. 1358 ஆம் பசலி ஹைதராபாத் ஹரிஜன (சமூக முட்டுப்பாடுகள் நீக்கம் ஒழுங்குமுறைச் சட்டம் (எண் LV/1358 பசலி).
14. 2005 ஆம் சம்வத் மத்ய பாரத் ஹரிஜன அயோக்யதா நிவாரண விதான் (மத்ய பாரத் சட்ட எண் 15/1949).
15. 1943 ஆம் ஆண்டு குடியியல் முட்டுப்பாடுகள் நீக்கம் சட்டம் (மைசூர்ச் சட்டம் XLII/1943).
16. 1948 ஆம் மைசூர் ஆலயப் பிரவேசம் அதிகாரமளிப்புச் சட்டம் (மைசூர்ச் சட்டம் XIV/1948.)
17. சௌராஷ்டிரா ஹரிஜன (சமூக முட்டுப்பாடுகள் நீக்கம்) அவசரச் சட்டம் (எண் XL/1948.)
18. 1125 ஆம் கொல்லம் ஆண்டு திருவாங்கூர்-கொச்சி ஆலயப் பிரவேசம் சமூக முட்டுப்பாடுகள் நீக்கம் சட்டம் (திருவாங்கூர்-கொச்சிச் சட்டம் VIII/1125.)
19. 1950 ஆம் ஆண்டு திருவாங்கூர்-கொச்சி ஆலயப் பிரவேசம் சமூக முட்டுப்பாடுகள் நீக்கம் சட்டம் (திருவாங்கூர்-கொச்சிச் சட்டம் XXVII/1950.)
20. 1949 ஆம் ஆண்டு குடகு பட்டியல் சாதியினர் (குடியியல் மற்றும் சமூக முட்டுப்பாடுகள் நீக்கம்) சட்டம் (குடகுச் சட்டம் I/1949).
21. 1949 ஆம் ஆண்டு குடகு ஆலயப் பிரவேசம் அதிகாரமளிப்புச் சட்டம் (குடகுச் சட்டம் II/1949).